**ஜனாதிபதித் தேர்தல் 2019 – ஊடக அறிக்கை, ஒக்டோபர் 29, 2019**

**கொழும்பு, இலங்கை**

2019 இற்கான ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்தான கடந்த 40 நாட்களில், தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV), தேர்தல் சட்ட மீறுதல்கள் தொடர்பாக 534 வேறுபட்ட சம்பவங்களைப் பதிவு செய்துள்ளது. கீழ்வருபவை, குறிப்பாக அண்மைக் காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட போக்குகளாகும்:

**அரசியல் ரீதியான ஆதரவளித்தல்களுக்கு சிறுவர்களை உபயோகித்தல்**

அரசியல் வேட்பாளர்களை ஆதரிப்பதற்கு பல்வேறு வழிகளிலும் சிறுவர்கள் தொடர்ச்சியாக உபயோகப்படுத்தப்படுவதை இந்தத் தேர்தல் காலம் காண்கிறது. அரசியல் ரீதியான ஆதரவளித்தலுக்காக சிறுவர்களை உபயோகிப்பது தவறென்பதை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளது.

பின்வரும் சம்பங்களிலும் மற்றும் சந்தர்ப்பங்களின் போது, இலங்கை பொதுஜனப் பெரமுன (SLPP) மற்றும் புதிய ஜனநாயக முன்னணி (NDF) என்பன இந்த சட்ட ஏற்பாடுகளை நேரடியாகவே மீறியுள்ளன:

1. இலங்கை பொதுஜன பெரமுனவின் ஜனாபதித் தேர்தல் வேட்பாளர், கோத்தபாய ராஜபக்சவின் ஒரு பிரச்சார விளம்பரத்தில் பாடசாலைச் சீருடையில் சிறுவர்களை உபயோகித்தமை.

2. இலங்கை பொதுஜனப் பெரமுனவின் செய்தித்தாள் விளம்பரத்திற்காக பள்ளிச் சீருடையிலான ஒரு சிறுவனை உபயோகித்தமை.

3. புதிய ஜனநாயக முன்னணியின் (NDF) தேர்தல் பிரச்சாரப் பிரதிநிதியும் அமைச்சருமான மங்கள சமரவீரவின் புகைப்படத்தில் சிறுவர்களை உபயோகித்தமை, மற்றும் அந்தப் படத்தை சமூக வலைத்தளங்களில் பரப்பியமை.

4. ஒக்டோபர் 25, 2019 அன்று ஊவா பரணகமவில் இலங்கை பொதுஜனப் பெரமுனவின் ஒரு ஊர்வலத்தில் அரசியல் ரீதியான ஆதரவளித்தலுக்காக உடல் மீது வர்ணம் பூசிய ஒரு சிறுவனை உபயோகித்தமை.

5. இலங்கை பொதுஜனப் பெரமுனவின் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவின் இணையத்தளத்தில் சிறுவர்களின் படங்களை உபயோகித்தல்.

இந்த விடயங்கள் தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு CMEV ஏற்கனவே ஓர் எழுத்து மூலமான முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளது.

**தேர்தல் பிரச்சாரங்களுக்காக அரசாங்கப் பாடசாலை வளாகத்தை உபயோகித்தல்**

வட மத்திய மாகாண ஆளுநரின் நேரடித் தலையீட்டுடன் கலேபிந்துனுவெவ ஆரம்பப் பாடசாலையின் மைதானத்தை இலங்கை பொதுஜனப் பெரமுன உபயோகிப்பதற்கு முற்பட்டமை குறித்து CMEV அறிவுறுத்தப்பட்டது. அநுராதபுர கலேபிந்துனுவெவ நகரில் பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கு பல்வேறு இடங்கள் இருக்கக்கூடியதான நிலையில் இது நிகழ்ந்துள்ளது.

பிரச்சாரத் தேவைகளுக்காக அரசாங்கப் பாடசாலை வளாகங்களை உபயோகித்தலும் மற்றும் அதற்காக உயர்மட்ட அரச அதிகாரிகளின் தலையீடுகளும் முற்றிலும் தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

**பிரச்சாரத்தின் போது வேட்பாளர் மற்றும் தேர்தல் சின்னத்தை காட்சிப்படுத்தாமை**

இலங்கை பொதுஜனப் பெரமுன மினுவங்கொடை நகரில் வீதி நெடுகிலுமாகக் கட்டப்பட்ட தேர்தல் பந்தல்களில் அதன் ஜனாதிபதி வேட்பாளரையோ அல்லது வாக்குச் சின்னதைத்தையோ காட்சிப்படுத்தாதது அறிவிக்கப்பட்டது. ஆனால், கட்சித் தலைவரினது படங்கள் மற்றும் பிரதேச ஏற்பாட்டாளர்களது படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. தேர்தல் சட்டத்தின்படி, வேட்பாளர் மற்றும் சின்னம் அல்லாத படங்களைக் காட்சிப்படுத்துதல் சட்டவிரோதமானதாகும்.

**மத மற்றும் தேசிய நல்லிணக்கத்திற்கு இடையூறு செய்கின்ற தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடுதல்**

தேர்தல் காலத்தின் போது, ஓர் எண்ணற்ற பிரச்சார நடவடிக்கைகள், விசேடமாக பொதுஜன ஐக்கிய முன்னணியால் முன்னெடுக்கப்பட்டவை, பல்வேறு வடிவங்களில் தீவிர தேசியவாத மற்றும் மதவாதக் கண்ணோட்டங்களை வெளிப்படுத்தின. உதாரணத்திற்கு, கண்டியில் ஒரு பெண் சபை உறுப்பினர் தீவிரவாத கருத்துகளுடனான பிரசுரங்களை விநியோகிக்கும் போது கைது செய்யப்பட்டார். அந்தப் பிரசுரமானது 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின் ஒரு மீறுதலாகும். அப்பிரசுரம் அதனை வெளியிட்டவர் அல்லது அச்சடித்தவரின் விபரங்களை வெளிப்படுத்தவில்லை.

நன்றி.

……………………………

மஞ்சுள கஜநாயக்க,
தேசிய ஒருங்கிணைப்பாளர்,
CMEV